**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATTUR.**

**C.C. No.800/2025.**

1. Deposition of Witness for : PW1
2. Name : பிரேம்குமார்.க
3. Father's Name : கணேசன்
4. Village : வேலூர்
5. Taluk : வேலூர்
6. Calling : உதவி இயக்குநர் – 2 தொழிக பாதுகாப்பு சுகாதாரம்
7. Age : 31

Solemnly affirmed by Selvi.M.K.Anusha, M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2025.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

நான் தற்போது இரண்டாம் வட்டம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உதவி இயக்குநராக பொறுப்பு வகித்து வருகிறேன். திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா, வளையம்பட்டு, எம்.சி.ரோடு, கதவு எண்.1/128, பாரத் இன்ஜினரிங் ஒர்க்ஸ், என்ற முகவரியில் இயங்கும் தொழிற்சாலை manufacturing of leather tanning and finishing machine and servicing பணி நடைப்பெற்று வருகிறது. மேற்கண்ட முகவரியில் இயங்கும் தொழிற்சாலையில் திரு.ஜெயசங்கர் (லோடு மேன்) வயது 55 என்ற தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளது என ஊடகங்களில்

20.04.2025 அன்று மாலை செய்து வெளிவந்ததை அடுத்து 21.04.2025 அன்று உதவி இயக்குநர்–II ஆகிய நான் மரண விபத்து புலனாய்வு செய்யப்பட்டது. 21.04.2025 அன்று ஆய்வின்போது காணப்பட்ட முரண்பாடுகளுக்கு என்னால் ஆய்வறிக்கை செய்யப்பட்டது. தொழிற்சாலை ஆய்வின்போது உரிமையாளர் ஆகிய திரு.ஆர்.மனோகரன் உடன் இருந்தார். அவரிடம் ஆய்வறிக்கையில் கையொப்பம் வாங்கப்பட்டது. மேற்படி ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தொழிற்சாலையின் படிவம் எண்.2ன் படி தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் திரு.மனோகரன் வயது 67 த/பெ. ராஜகோபால் ஆவார். மேற்படி படிவம் எண்.2 **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வின்போது விபத்து நடந்த சமயம் உடன் இருந்த தொழிலாளர்கள் திரு.ஆர்.தமிழ்செல்வம் மற்றும் திரு.குப்பன் ஆகியோரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. தமிழ்செல்வன் என்பவரின் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குப்பன் என்பவரின் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வின்போது விபத்து எவ்வாறு ஏற்பட்டது என புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டது. புகைப்படங்கள் (எண்ணிக்கை–3) **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆய்வின் அடிப்படையில் தொழிற்சாலையின் மீது காணப்பட்ட முரண்பாடுகளுக்கு தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளருக்கு காரணம் கோரும் அறிக்கை 30.04.2025 அன்று அனுப்பட்டது. அந்த காரணம் கோரும் அறிக்கை **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரணம் கோரும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல்

அட்டை 02.05.2025 அன்று பெறப்பட்டது. ஒப்புதல் அட்டை **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து குறித்த விதம் விபத்துக்கான காரணம் மற்றும் விபத்து தடுப்பு முறைகளுடன் கூடிய விரிவான புலனாய்வு அறிக்கை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கு 30.04.2025 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விரிவான புலனாய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து நிகழ்ந்தது குறித்து திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை FIR.No.144/2025 U/s. 194 BNSS பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நகல் பெறப்பட்டது. பிரேத பரிசோதனை நகல் **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரணம் கோரும் அறிக்கைக்கான பதில் கடிதம் உரிமையாளர் மற்றும் மேலாளரிடமிருந்து 09.05.2025 அன்று பெறப்பட்டது. பதில் கடிதம் **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பெறப்பட்ட பதில் கடிதம் ஏற்புடையதாக இல்லை என்பதால் உரிமையாளர் மற்றும் மேலாளர் மீது மேல் நடவடிக்கை கடிதம் 05.06.2025 அன்று அனுப்பப்பட்டது. மேல் நடவடிக்கை கடிதம் **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு முன்மொழிவு பேரரணை என்னால் 05.06.2025 அன்று சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. வழக்கு முன்மொழிவு பேரரணை **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு காரணம் கோரும் அறிக்கைக்கு திருத்த சீட்டு 13.06.2025 அன்று வழங்கப்பட்டது. திருத்த

சீட்டு **<u>அ.த.சா.ஆ.14</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் வழக்கு தொடர அனுமதி ஆணை 10.07.2025 அன்று பெறப்பட்டது. வழக்கு தொடர அனுமதி ஆணை **<u>அ.த.சா.ஆ.15</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே கீழ்கண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் திருப்பத்தூர் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்னிலையில் 18.07.2025 அன்று குற்றமுறையீடு உதவி இயக்குநர் ஆகிய என்னால் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றமுறையீடு தொலைச்சாலை சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950ன் கீழ் தண்டனை பிரிவு 92 ஆகும்.

**<u>முரண்பாடு–1</u>**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 7A(1)(2) உடன் பிரிவு 41 மற்றும் விதி 61F படி மேற்கண்ட சட்ட பிரிவுகளின் படி எந்த உரிமையாளரும் தங்கள் தொழிற்சாலையில் பணிநேரத்தில் பணியில் இருக்கம் தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாப்பும் மற்றம் இதர நலன்களை உறுதி செய்திடல் வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும், எந்த ஒரு பணியோ, பணி செயல்முறையோ அங்கு பணியாற்றும் தொழிலாளருக்கு ஊறுவிளைவிக்கா வண்ணம் அமைக்கப்படவேண்டும்.

ஆனால் திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, க.எண்.1/128, எம்.சி ரோடு, பாரத் இன்ஜினரிங் ஒர்க்ஸ், என்ற முகவரியில் இயங்கும்

தொழிற்சாலை manufacturing of leather tanning and finishing machine and servicing பணி நடைப்பெற்று வருகிறது. மேற்கண்ட தொழிற்சாலையில் பழுதுக்கு வரும் இயந்திரங்கள் மற்றும் பழுது பார்க்கப்பட்ட இயந்திரங்களும் Mobile Crane மூலமாக Loading and Unloading பணியும் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த 20.04.2025 அன்று சுமார் 08.30 மணியளவில் தங்கள் தொழிற்சாலையில் பழுது பாரக்கப்பட்ட Leather Shaving Machine–ஐ Elrich International (Kolkata) என்ற தொழிற்சாலைக்கு அனுப்புவதற்காக லோடு மேன் நான்கு தொழிலாளர்களுடன் மெஷினை Mobile Crane மூலமாக Lifting செய்யும் பணியில் திரு.ஜெய்சங்கர் லோடுமென் வயது 55 த/பெ.சின்னதம்பி, என்ற தொழிலாளியும் ஈடுபடுத்தப்பட்டார் அப்போது Lifting belt பலவீனமாக இருந்ததாலும், பாதுகாப்பான செயல் முறைகள் (SOP) கடைப்பிடிக்கப்படாததாலும் மற்றும் தக்க மேற்பார்வையில் பணி நடைபெறுவதை ஊறுதி செய்யாததாலும் 6 டன் எடை கொண்ட Leather Shaving Machine–ஐ Mobile Crane மூலமான தூக்கும்போது பளுதாங்காமல் Lifting Belt அறுந்து மெஷினின் வலதுபுறமாக நின்றுக்கொண்டிருந்த தொழிலாளி திரு.ஜெய்சங்கர் லோடுமென் வயது 55 த/பெ.சின்னதம்பி, என்பவரின் மார்பின் மீது சரிந்து விழுந்ததில் மெஷினின் அடிபாகத்தில் மேற்படி தொழிலாளி சிக்கி பலத்த காயமுற்றார். உடனடியாக அவரை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது மருத்துவர் பரிசோதித்துவிட்டு தொழிலாளி மரணம் அடைந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட தொழிற்சாலையில் நிகழ்ந்த விபத்தின்போது தொழிலாளி மரணம் அடைந்ததாக 21.04.2025 அன்று ஆய்வின்போது

அறியப்பட்டது. இது பிரிவு 7A(1)(2) உடன் பிரிவு 41 மற்றும் விதி 61F படி கடும் முரணாகும்.

**முரண்பாடு – 2**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 6(1)(d) விதி 7(1)(2)(3) மற்றும் 12B(5) படி எந்த ஒரு உரிமையாளரும் செல்லத்தக்க உரிமம் இல்லாமல் எந்த ஒரு வளாகத்தையும் தொழிற்சாலையாகவோ அல்லது உற்பத்தி பணி மேற்கொள்ளும் இடமாகவோ உபயோகிக்கக் கூடாது. ஆனால் இதற்கு முரணாக திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, க.எண்.1/128, எம்.சி ரோடு, பாரத் இன்ஜினரிங் ஒர்க்ஸ், என்ற முகவரியில் இயங்கும் எதிரியின் தொழிற்சாலையில் 12.04.2025 அன்று 14 தொழிலாளர்களை பணியமர்த்தி Loading and unloading பணி மேற்கொள்ளப்பட்டது கண்டறியப்பட்டது. மேற்கண்ட தொழிற்சாலையின் உரிமையாளராகிய திரு.மனோகரன் அவர்கள் 2010 முதல் 2025 வரையிலான உரிமக் கட்டணத்தை வேலூர் இணை இயக்குநர் தொழிலக பாதுகாப்பும் மற்றும் சுகாதாரம்–II அவர்களுக்கு http://dish.tn.gov.in என்ற வலைத்தளம் மூலமாக விண்ணப்பித்து உரிம சான்றினை பெற தவறியுள்ளீர் என்பவது ஆய்வின் போது கண்டறியப்பட்டது. இது பிரிவு 6(1)(d) விதி 7(1)(2)(3) மற்றும் 12B(5) படி கடும் முரணாகும்.

**முரண்பாடு –3**

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) தமிழ்நாடு விதிகள் 1950 பிரிவு 88 விதி 96(1)(2) உடன் அட்டவணை (1)(a) படி எந்த ஒரு தொழிற்சாலையிலும் விபத்து நடைபெற்றாலும் தொழிற்சாலையின்

மேலாளர் தொழிற்சாலை அமைந்திருக்கும் ஆட்சி எல்லைக்குட்பட்ட தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்திற்கும், சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களுக்கும் விபத்து குறித்தான தகவலை உடனடியாக தொலைபேசி மூலமாகவோ, தனிநபர் மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். மேலும் விபத்து நடந்த 12 மணி நேரத்திற்குள்ள தொழிலாளின் விவரங்கள் அடங்கிய அறிக்கை படிவம்–18ல் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஆனால் இதற்கு முரணமாக எதிரி தொழிற்சாலையில் 20.04.2025 அன்று முன்பகல் 08.30 மணியளவில் ஏற்பட்ட விபத்தில் லோடு மேன் திரு.ஜெய்சங்கள் வயது 55 த/பெ.சின்னதம்பி என்ற நபர் லோடிங் பணியின்போது விபத்தில் மரணம் அடைந்து 12 மணி நேரத்திற்கு மேலாகியும் நாளது தேதி வரை படிவம் 18 ல் பூர்த்தி செய்து வேலூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்–II அவர்களுக்கும், சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவில்லை. இது பிரிவு 88 விதி 96(1)(2) உடன் அட்டவணை (1)(a) படி கடும் முரணாகும்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u> இல்லை.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.11.13 17:40:00 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.